ஓம்.

பகவான் திரு. இரெட்டியப்பட்டி
ஆண்டவரின் மலரடிகள் வாழ்க.



வேலூரில்
இரெட்டியப்பட்டி சுவாமிகள்
அருட்பெரும் ஆட்சி.

ஆக்கியோன்,

குடந்தை S. N. இராமலிங்கம்.

ஜெயலெக்ஷிமி விலாஸ் பிரஸ், திருத்துறைப்பூண்டி.



வெளியிடுபவர்:—

குடந்தை S N. இராமலிங்கம்.

திரு. இரேட்டியபட்டி சுவாமிகளின்
அறிவாலயம்.

வேளூர் [அஞ்சல்]
திருத்துறைப்பூண்டி கூற்றம்,
தமிழ்நாடு.

ஓம்

பகவான் திரு. இரெட்டியப்பட்டி ஆண்டவரின்
மலரடிகள் வாழ்க.



சத்தியந் தவரு மாந்தர் தன்னை ரட்சிக்குந் தெய்வம்

குற்றமில்லாத வெங்கள் குரு இரெட்டியப்பட்டி
சுவாமி

வித்தகப் பதம் பணிந்து விநாயகர் கோவில் தன்னை

நித்தமும் வலம் வந்தோர்கள் நீடுழி வாழ்வர் தாமே.

ஆக்கியோன்,

குடந்தை S. N. இராமலிங்கம்.

ஓம்.

சற்குருவே நம:

வேலூரில்
இரெட்டியப்பட்டி சுவாமிகள்
அருட்பெரும் ஆட்சி.

(விருத்தம்)

அன்பு கொண்டுலகினி லன்பருக் குதவிட
அருந் தவம் புரிந்த மூர்த்தி
அவனி யோர் நோய் பேய்ப் பெருங்குட்ட
விட முத,லாடிடும் பேய்களோடத்
துன்பு கொண்டே மன முடைந்து பலநாட்
திரிந்து யருற்று நின்ற பேரும்
சூனியமும் வாதமொடு துகி லணியாத
வரும், சோர்ந்து பல மாத ரோடும்
இன்பமொ டிரெட்டிய பட்டி சுவாமிகள்
வருகை, யெதிர் பார்த்து வந்த நாளில்
எண்ண முடியாது சதுர் வீதிக ளெலா நிறைந்
தெதிர் வந்து சேவித்திட
சன்னிதி விலக்கியே அண்ணி கைத்திருநீறுந்
தான் வாங்கு வோராயிரம்
தரும மிகு வேலூரிலுருவ மொடு வந்து
வருட் தந்த பதஞ் சரணே சரண்.

அண்ணி — திரு பாலாம்மாள்.

காணிக்கை.

அன்பே திருவுருவாய் அமைய பெற்றவரும் மாதர் குல மாணிக்கமாய் திகழ்ந்துவரும், என் வாழ்க்கையில் பேரொளியாய்பிரகாசித்துவரும்

எனது அன்னையார்

உயர்திரு **மனோன்மணி அம்மாளின்**

மலர்க் கரங்களுக்கும்,

குருபிரான் திருவாய் மலர்ந்தருளியசட்டமே தன் இதயகீதம் என்று வாழ்ந்து பரமானந்த மூர்த்தியின் திருவடி நிழலிலே அமைதியுற்ற

என் வாழ்வரசி, சற்குருசெல்வி:

திரு. **வீரலெக்ஷிமி அம்மாளின்**

மலர்க் கரங்களுக்கும்,

இந்நூலை காணிக்கையாக அளிக்கிறேன்.

ஓம்.

சற்குருவே நம:

வேலூரில்
இரெட்டியப்பட்டி சுவாமிகள்
அருட்பெரும் ஆட்சி.

(விருத்தம்)

அன்பு கொண்டுலகினி லன்பருக் குதவிட
அருந் தவம் புரிந்த மூர்த்தி
அவனி யோர் நோய் பேய்ப் பெருங்குட்ட
விட முத,லாடிடும் பேய்களோடத்
துன்பு கொண்டே மன முடைந்து பலநாட்
திரிந்து யருற்று நின்ற பேரும்
சூனியமும் வாதமொடு துகி லணியாத
வரும், சோர்ந்து பல மாத ரோடும்
இன்பமொ டிரெட்டிய பட்டி சுவாமிகள்
வருகை, யெதிர் பார்த்து வந்த நாளில்
எண்ண முடியாது சதுர் வீதிக ளெலா நிறைந்
தெதிர் வந்து சேவித்திட
சன்னிதி விலக்கியே அண்ணி கைத்திருநீறுந்
தான் வாங்கு வோராயிரம்
தரும மிகு வேலூரிலுருவ மொடு வந்து
வருட் தந்த பதஞ் சரணே சரண்.

அண்ணி — திரு பாலாம்மாள்.

காணிக்கை.

அன்பே திருவுருவாய் அமைய பெற்றவரும் மாதர் குல மாணிக்கமாய் திகழ்ந்துவரும், என் வாழ்க்கையில் பேரொளியாய்பிரகாசித்துவரும்

எனது அன்னையார்

உயர்திரு **மனோன்மணி அம்மாளின்**

மலர்க் கரங்களுக்கும்,

குருபிரான் திருவாய் மலர்ந்தருளியசட்டமே தன் இதயகீதம் என்று வாழ்ந்து பரமானந்த மூர்த்தியின் திருவடி நிழலிலே அமைதியுற்ற

என் வாழ்வரசி, சற்குருசெல்வி:

திரு. **வீரலெக்ஷிமி அம்மாளின்**

மலர்க் கரங்களுக்கும்,

இந்நூலை காணிக்கையாக அளிக்கிறேன்.

ஓம்
குருபிரான் திருவடிகளுக்கே சரணம்.

ஆக்கியோன் முன்னுரை.

ஆன்ம நேய ஒருமைபாடு மிக்க சற்குருநேய செல்வர்காள்!

இதயம்கனிந்த அன்பார்ந்த வணக்கம்

தயாநிதியும், தபோநிதியுமான திரு, இரெட்டியப்பட்டிசுவாமிகள் வேளூர் என்னும் திருத்தலத்திற்கு 16 முறை சட்டஅடியவர்களான திரு. கமலப் பிள்ளை, பாலம்மாள் என்னும் சதி பதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி எழுந்தருளி எண்ணற்ற பிணியாலும், பிறவற்றால் நேரும் துன்பங்களையும் தாங்காது தவிக்கும் மக்களை தன்அருள்நோக்கால்குணப்படுத்தியுள்ளார்கள்.

நான் கேட்டறிந்தவைகளை எல்லாம் புத்தக மாக வெளியிட வேண்டுமென்ற பேராவல் ஏழு ஆண்டுகளுக்கு முன் என் எண்ணத்தில் உதித்தது.

அன்று என் எண்ணத்தில் விழுந்த வித்து மரமாகி, இன்று திருவருளால் கனியாகி பலன் தந்துள்ளது. அந்த பலன் தங்கள் திருக் கரங்களில் தவழுகிறது.

குருபிரான் வேலூரில் புரிந்த அருள் ஆட்சி ஏராளம், அவை முழுவதும் இந்த நூலில் இடம் பெறவில்லை. காரணம் புத்தகம் பெரிதாகவும் சிலவதிகமாகவும் ஆக்கவிருப்பமில்லை, பரபரப்பு மிக்க இக்காலத்தில் அறியகருத்துக்களை குறுகிய காலத்தில் படிக்க கூடியதாயும், சிலவுமிகக்குறைவாக இருக்கவேண்டும் என்பதே என் ஆவல்.

இது போன்ற மற்ற பகுதிகளையெல்லாம் வெளியிடக் கருதியுள்ளேன். அதை செயல் படுத்தும் திறன் தங்கள் பால் உள்ளது.

குருபிரானின் திருவருள் எங்கும் பரவ வேண்டுமென்பதே என் நோக்கம், அதில் வெற்றி பெறுவேன். ஆனால் என் உள்ளத்தில் நின்று எந்த மகா சக்தி இப் பணிக்கு தூண்டியதோ அதற்கே உரியது.

எங்கும் நிலவுக பேரின்பம்.

வாழ்க சற்குருவின் மலரடிகள்.

அடிமை,

குடந்தை S. N. இராமலிங்கம்.



ஓம்.
ஸ்ரீ மத் இரெட்டியபட்டி சுவாமிகள் துணை.

மதிப்புரை.

அடியார்கள் பாத தூளிகளுக்கு வணக்கம். ஸ்ரீ இரெட்டிய பட்டி சுவாமிகள் முன் ஜென்மங்கள் தோறும் செய்து வந்த தவப்பயனால் சுவாமிகள் பரிபூரண அருள்பெற்று அவர்கள் இரெட்டிய பட்டி ஸ்தலத்தில் தோன்றினார்கள். சாதி, மத பேதமின்றி மக்கள் மேல் மாறாத அன்புகொண்டு ஆட்கொள்ள ஆங்காங்கு நகரங்கள், கிராமங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள மக்களைகுடும்ப வாழ்க்கையிலிருந்து மோட்சமடைய வேண்டிய சாதனங்களை மக்களுக்கு எளிதில் கைகூடும்படியான சாதகம் செய்து முத்திப் பேற்றையருளினார்கள். அவர்கள் போதனையின்படி மாறாத அன்பு கொண்டு அனுபவித்து வந்தவர்கள் இன்னும் சிலர் நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்து வருகிறார்கள்.

சுவாமிகள் வருகைதந்து அவர்களால்தேர்ந்தெடுக்கப்பட்டதில்சேர்ந்தது வேளூர் கிராமமும் ஒன்று.

வேளூருக்கு ஸ்ரீ சுவாமிகள் வருங்காலத்தில் அவர்களுக்கு ஸ்ரீ சங்கராச்சாரியார் போன்று சுவாமிகளுக்கு மேள, தாள, வாத்தியங்களுடன் வீதி உலா நடத்தி வருவது வேளூர் அடியார்களின் தொண்டாகவே நடந்து வருகிறது. சுவாமிகள் சமாதியடைந்த பின்னும் வேளூர் கிராமத்து அடியார்களால் அன்று போல் இன்றும் சுவாமிகள் பட ஊர்வலம் தைமீ கடைசி வெள்ளிக்கிழமை நடைபெற்று வருகிறது.

வேளூருக்கு சுவாமிகள் வந்து பிரசங்கம் செய்யும்போது கூறியவை.

சல்லடைக்கண்களுக்கு ஒப்பான சரீரத்துக்கு பரம ஔஷதம் சுத்த ஜலம்.

தேவதைகளுக்குப் பிரார்த்தனை செய்தல் கண்டிப்பாக கூடாது. தேவதைகளை கூலிக்காரனுக்குதல் கூடாதென்றும் பிரார்த்தனை இருந்தால் சீக்கிரம் நிறைவேற்றுங்கள் மரணமெய்து முன்னே சரணமடைய வேண்டுமென்றும் சொல்லுவார்கள். சுவாமிகளின் அடியாாகளில் ஒருவராகிய குடந்தை S. N. இராமலிங்கம் வேலூரில் இரெட்டியபட்டி சுவாமிகளின் அருள் ஆட்சி நடந்து வந்ததும், வருகிறதுமான ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் மகிமையை பற்றி எழுதியிருக்கும் சிறு குறிப்பு நூலில் தொகுத்திருக்கும் விபரங்களை ஆங்காங்கு நேரில் சென்று அடியார்கள் மூலமாய் தனக்குத் தெரிய வந்ததையே ஷதொகுப்பில் அறிவிக்கப்பட்டிருப்பதை தவிர வேறு எதுவும் குறிப்பிடவில்லை.

சுவாமிகளின் பாத ஊழியன்,

M. கணேசம் பிள்ளை,

இராமனுதபுரம்.

திரு. M. கணேசம் பிள்ளை, வேலூர் M. இராமையா பிள்ளையின் மூத்த சகோதரர். சுவாமிகள் வேலூர் வருகைக்கு மூல காரணமாக இருந்தவர்கள்'

மதிப்புரை.

உலகெலாமுணரும் உண்மைப் பொருளின் அருட்பெரும் ஆட்சியினை உலகோருய்யவென்று உருவெடுத்து அருந்தவ மியற்றி தவத்தினருளைச் சட்டத்தினாலடியவர்க்களித்து இக பர மிரண்டிலுமின்புற்று வாழ வழி காட்டிய ஸ்ரீமத் இரெட்டிய பட்டி சுவாமிகளின் அருட்பெரும் ஆட்சியை வேளூரில் தங்கி யிருந்து நடாத்தியக் காட்சியையும் அருள் வாக்கையும் கேட்டானந்தமுற்றவைகளையும் அடியனாற் சொல்லத்தரமன்று

ஆயினும் வேளூரில்மட்டும் சுவாமிகள் வந்திருந்த காலத் தில் என்ன அருளாட்சி நடந்ததோ அது போன்று இன்றும் நடந்தேறி வருமென்பதற்கையமில்லை.

சுவாமிகள் தங்கிய இடமெலாமலைந்தும் உண்மை அருட் செயல் ஆங்காங்கு நடந்தவைகளையறிந்தும் வேளூர் வந்து விசாரித்தும் அடியனை ஆரூரில் கண்டனைத்துமறிந்தும்தைமீ கடை வெள்ளியில் தானும் தொண்டாற்றியும் எல்லையில்லா இன்பக்காட்சியிலிறுமாந்தும் வழிகாட்டும் வான் பொருளில் இத் தலச் சிறப்பில்லையேயென்று ஏங்கியும்,

"வேளூரில் இரெட்டியபட்டி சுவாமிகள் அருட் பெரும் ஆட்சி, என்னும் இந் நூலை வெளியிடப் பணியாற்றிய "சட்ட சொற்பணியாளன், **சாக்ஷியருளன் S.N. இராமலிங்கம்** அவர்களை, வேளூரைச் சார்ந்த அடியார்கள் அனையர்கள் சார்பிலும் எனதுமனமார்ந்த நன்றியையுஞ் செலுத்தஎன்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இங்ஙனம்,

அடியார்க்கடியேன், பிர்மானுபூதி.

(ஒப்பம்) **S. பேத்த பெருமாள்,**

வேளூர், 24—3—65.

ஓம்.

திரு. இரேட்டியப்பட்டி
** சுவாமிகள் வரலாற்றின் சுருக்கம். **

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நாகலாபுரம் என்னும் சிற்றூருக்கு கிழக்கே அரை மைல் தூரத்திலுள்ளது இரெட்டியப்பட்டி என்னும் திருத்தலமாகும்,

அவ்வூரில் சைவ வேளாள மரபில் உள்ள திரு, வீரபத்திர பிள்ளை, திருமதி. ஆவிடை அம்மை என்னும் சதிபதிகள் ஆற்றிய அருந்தவப்பயனாய் உலகம் உய்யும்பொருட்டு கி பி. 1856ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் (நள ஆண்டு புரட்டாசித்திங்கள் 2-ம்நாள் ரேவதிவிண்மீனில் ஒருஆண்குழந்தை தோன்றியது. அதற்கு சுப்பிரமணியம் என்ற திருப்பெயர் சூட்டினார்கள்,

மூன்று வயதிலே மற்றக் குழந்தைகளைப் போல்விளையாட்டில் ஈடுபடாமல்தனியான இடத்தில் அமர்ந்து கைகூப்பித்தொழும் பூஜைஅறையில் சென்று ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கு பூஜை புரியும்.

23வது வயதில் மதுரை சென்று அன்ருடம் விடியல் 4-மணிக்கு வைகையில்நீராடி முழுமுதற் கடவுளைவழிபட்டு கடும்தவம் ஆற்றிவந்தபோது இந்த அருளாளரை "இரெட்டியபட்டி சுவாமி" என்று போற்றிப் புகழ்ந்தார்கள்.

அக்காலத்தில் சுவாமிகள் பரிபூரண விநாயகரின் திருக்காட்சி கண்டு திருவருளால் தேனினும் இனிய பல அருள் பாடல்களைப்பாடினுர்கள்

திடீரென மதுரையைவிட்டு மறைந்து திருக்குற்ருலம் நீர்வீழ்ச்சிக்குத் தென்மேற்கே உள்ள சண்பகமகாதேவி என்னும் இடத்திற்குச்சென்று மறைவானகுகையில் கடும்தவம் ஆற்றி வந்தனர் 12 ஆண்டுகள்ஆங்குதனித்தவம்ஆற்றியதின்பயனுய் எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை எல்லா மக்களும் பேதமின்றி எளிதில் அடைவதற்கான ஒரு திட்டத்தையும் வகுத்தருளினுர்கள், அதற்கு "சட்டம்" என்று திருநாமம் சூட்டினுர்கள்.

சுவாமிகள் அன்னை திருவயிற்றிலிருந்து நில உலகில் தோன்றிய அதே இடத்திலேயே கி. பி. 1923ல், துந்துபிஷு மார்கழிமீ 28௳ அனுட விண்மீனில் இறைவனோடு இறைவனாய் இரண்டற கலந்தார்கள்.

இன்றும் அடியவர்களுக்கும். அன்பர்களுக்கும் தோன்றாத்துணையாய் விளங்கிவருகிறார்கள்.



சுவாமிகளின் வரலாற்றில்

உன்னதமான பகுதி.

எந்த இடத்தில் தாயார் வயிற்றிலிருந்து பிறந்தார்களோ, அதே இடத்தில் சுவாமிகள் மறைவுற்ருர்கள் அந்த இடத்தில் சுவாமிகள் கம்பீரத்துடன் அமர்ந்திருக்கும் திருவுருவம் அமைத்து ஆலயமாக்கப் பட்டுள்ளது. அதே இடத்தில் சுவாமிகள் விநாயகப் பெருமானையும், வேலையும் வைத்து வழிபட்டார்கள் மறைந்த அவ் வேல் பிற்காலத்தில் கீழசிவல்பட்டி, சிகப்பியாச்சியின் கனவில் தோன்றியபடி அதே இடத்தில் மண்ணில் இருந்து தோண்டி எடுக்கப் பட்டது.

மகான்கள் தோன்றியது ஓர் இடமாகவும் மறைந்தது ஓர் இடமாகவும் இருக்கும் ஆனுல் நம் சுவாமிகள் தோன்றிய இடமே மறைவிடம்.

வாழ்க அண்ணரின் திருநாமம்.



சுவாமிகள் பிரதிஷ்டை

... செய்துள்ள விநாயகர் ஆலயங்கள். ...

இரெட்டியப்பட்டியில் ஸ்ரீ சித்திக் கணபதி.

வேலூரில் ஸ்ரீ ஹரி அவதார கணபதி.

ஆனத்தூரில் ஸ்ரீ விஷ்ணு அவதாரக் கணபதி

திருஇரேட்டியப்பட்டி சுவாமிகள், திருவாய் மலர்ந்தருளிய

"சட்ட" விளக்கம்.

சட்டம் ஏற்பட மூன்று காரணங்கள்.

1 மக்கள் ஆண்டவனின் திருவருளில் நம்பிக்கையின்றி வாழ்தல்

2 இயற்கைக்கு மாருக வாழ்ந்து வறுமைக்கும், பிணிக்கும் ஆளாகிருர்கள்.

3 தேவைக்கு அதிகமான பொருள்களின் மீது விருப்பம் கொண்டு, அவைகளை பெறமுடியாமல் இயற்கையில் இன்பம் நிறைந்த இதயத்தை துன்பத்தில் ஆழ்த்தி நரக வாழ்க்கை வாழ்கிருர்கள்.

இந்த மூன்று காரணங்களை களைந்து விட்டால் மக்கள் இம்மை, மறுமை, பயன்களை பெற்று பேரின்ப வாழ்வு வாழ முடியும் என்று தீர்மானித்தார்கள்.

"சட்ட" முறைகள்.

1. விடியல் 4-மணிக்குமேல் 5-மணிக்குள் பச்சைத்தண்ணீரில் தலைமுழுக வேண்டும். ஒருநாள் கூட தவறக்கூடாது. குடிப்பதற்கும் பச்சை தண்ணீரையே உபயோகிக்க வேண்டும். எதற்கும் வெந்நீரை உபயோகிக்க கூடாது.

2. ஒரு தெய்வத்தையே வழிபட வேண்டும். அவர்அவருக்கு விருப்பமான தெய்வத்தை வழிபடலாம்.

3. சாதி, மதம், இனம், பால் வேற்றுமைகள் பாராட்டல் கூடாது.

4. புலால் உண்ணுதல் கூடாது.

5. எத்தகைய நோய் வந்தாலும் மருந்து சாப்பிடுதல் கூடாது ஆண்டவனின் திருவருளில் நம்பிக்கை கொண்டு காலை மாலை பச்சை தண்ணீரில் தலை முழுக வேண்டும்

6. பிரசவித்தாலும், தாய்க்கும் மகவுக்கும் உடனே பச்சை தண்ணீரில் ஸ்நானம் செய்விக்க வேண்டும். பத்தியம் எதுவும் ஏற்க கூடாது. தாய்க்கோ, மகவிற்கோ, நலங் குன்றியிருந்தால் மாலையும் நீராட வேண்டும்.

7. தேள், பாம்பு, பிற விஷ ஜந்துக்கள் தீண்டினால் உடனே குளிர்ந்த நீரில் தலைமுழுக வேண்டும். கடித்த விஷ ஜந்துக்களை கொல்லக்கூடாது.

8, நோயுற்ற காலங்களிலும், பிரசவித்த காலங்களிலும், விஷம் தீண்டிய போதும், உடையவன் அருளை உறுதியாகநினைத்து தூய்மையான பச்சை தண்ணீரில் சிறிது திருநீரும் துளசியும் இட்டு சாப்பிட வேண்டும் அவரவர் வழக்கமாக வழிபடும் ஆண்டவரின் திருநாமத்தை இடைவிடாது தியானம் செய்ய வேண்டும்,

9. நமக்கு ஏற்படும் இடர்பாடுகளைபிறர்உதவியின்றி இறைவனிடம் முறையிட்டு தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்

10. நாள், கோள், சகுணம் பார்த்தல் மணி, மந்திரம் தாயத்து இவைகளை நம்புதல் கூடாது,

11. இறந்தார்க்கு இரங்கல் கூடார்து. சமாதிவைக்க வேண்டும்.

12. பிரார்த்தனை செய்து கொள்ளுதல் கூடாது.

13. நீதி தேடி அறமன்றம் செல்லுதல் கூடாது. இறைவனிடமே நீதியைப்பெற வேண்டும்.

14. மது, சூது, புகை, லாகிரி பொருள்கள் உபயோகிக்க கூடாது.

15. வெள்ளிக்கிழமை விரதம் ஏற்க வேண்டும்.

16. அமைதியான இடத்தில் மனதை ஒறுமை படுத்தி நிஷ்டை கூடுதல் வேண்டும் நமக்கு ஏற்படும் குறைகளை இறைவனிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

17. சட்ட விதிப்படி நடப்பவர் தற்புகழ்ச்சி கொள்ளுதல் கூடாது.





சுவாமிகள் அடியவர்களிடத்தில் திருவாய் மலர்ந்தருளிய அருள் வாக்குகள்.

1 "சாமி மச்சுவீட்டுக்குப்போகும், குச்சுவீட்டுக்குப் போகும்" உடையவன் பணக்காரருக்குப் பாங்காளனா? ஏழைக்குப் பாங்காளனா?

2. அடியார்களை மணி மணியாக அல்லவா உடையவன் கணக்கு எடுத்து விட்டிருக்கு வடத்தைக் கையில் எடுத்து விடவேண்டும்: எடுத்து விட்டால் தேரில் உட்கார்ந்திருக்கும் உடையவன் இழு இழு என்று உற்சாகம் ஊட்டிச் செலுத்திக் கோண்டே போவான். கட்டாயம் நிமிஷத்தில் நிலை சேர்ந்து விடலாம்.

3 உடையவன் கணக்கு இப்போ தேயா விளங்கி விடும்? இன்னும் போகப் போகத்தான்விளக்க முறும். என்றும் அவனுடைய அருள் கொடி உலகமெங்கும் பறக்கும்,

4 ஆண்டவனது அருளாட்சி உலகின் மீதுள்ள மிக மிகப் பெரிய அரசாட்சிகளிலும் மேலானது. அதை நடத்தும் சிப்பந்திகளும், உத்தியோகஸ்தர்களும் அளவிறந்த பேராவர்.

5 உத்தியோகத்திற்கேற்ற சம்பளம் உண்டு. அன்பு மாறாது இருந்து வந்தால் அதுவேபோதும் மேற்கொண்டு நடத்த வேண்டியவற்றை யெல்லாம் அது ஒன்றே பையப் பைய நடத்தி வைத்து விடும்.

6 சாமி சட்டத்திலே வேலைக்கு ஏற்ற கூலி உண்டு.

என் அனுபவ மொழிகள்.

1 மரணத்தைக்கண்டு அஞ்சும் கோழை அருள் சட்டத்தை கைக்கொள்ள முடியாது.

2 மோக்ஷம், சொர்க்கம், நரகம் என்பது மேல் உலகத்தில் இல்லை.

ஆசை அற்ற இடம் மோக்ஷம்.
மனதில் அறிவு ஒளி பெற்ற இடம் சொர்க்கம்
மனதில் இருள் சூழ்ந்த இடம் நரகம்.
மனம் சலனமற்ற இடம் பேரின்பம்.

3 எல்லா வேதங்களின் சாரம்:— தன்னைப் போல் பிறரை நினைத்து வாழ வைப்பது.

4 தன் உள்ளத்தில் ஒளி வீசும் இறைவனை காணாது பிற இடம் தேடி அலைவது வீண்.

5 மனதை தன் வயமாக்கியவன் மனிதன். மனதை தன்வயமாக்காதவன் மிருகம்.

6 உப்பை நீரில் கரைப்பது போன்று மனதை தியானத்தில் கரைப்பது தவம்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அடிமை,
குடந்தை S. N. இராமலிங்கம்.

குரு துதி.

வேலூர் திருத்தலத்தில் அருள் செங்கோல் தாங்கி அருளாட்சி புரியும் பகவான் திரு. இரெட்டியப்பட்டி ஆண்டவரே,

ஏழைகளின் பங்காளரே,

அநாதைகளின் ரட்சகரே,

ஆபத் பாந்தவரே,

சர்வ நோய்களை நீக்க வல்லவரே,

தயா நிதியே

தபோ நிதியே,

கருணாநிதியே,

மனநோய் தீர்க்கும் மாமணியே,

சர்வ ஆனந்த மூர்த்தியே,

விஷக்கடியை நீக்கும் சமய சஞ்சீவியே,

இக பரம் தரும் இனிய கற்பகமே,

இதய மூர்த்தியே,

இயற்கை இன்ப வடிவே,

சர்வ மங்கள தயாபரரே நின் அடிமலர்க்கே சரணம்.

ஓம்.

சற்குரு மயம்.

வேளூரில் திரு. இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் ஆட்சி.

தஞ்சை மா வ ட் ட ம் திருத்துறைப்பூண்டி குறு வட்டத்தில் உள்ளதும். திருவாரூரில் இ ரு ந் து திருத் துறைப்பூண்டி செல்லும் பே ரு ந் து மார்க்கத்தில் உள்ளதுமான வேளூர் என்னும் திருத்தலம்.

வேண்டு வார்க்கு, வேண்டுவதைஅளித்துகலியுக வரதனுய் அன்றும் இன்றும் வி ள ங் கி வ ரு ம் தி ரு. இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள் சட்ட அடியவர் களான திரு. கமலப்பிள்ளை அன்ஞரின் வாழ்வரசியர் திருமதி. பாலம்மாள் வே ண் டு கோ ளு க் கி ண ங் கி 16 முறை வேளூருக்கு வருகை தந்துள்ளார்கள்.

சுவாமிகள் வருகை த ந் து ள் ள காலங்களில் திருமதி. பாலம்மாள் விடியல் நீ ரா டி சுவாமிகளுக்கு அபிஷேகம்செய்து கற்பூர, தீபாராதனை செய்து வழி படுவார்கள் அதுசமயம் 10 மைல் சுற்றளவில் உள்ள மக்கள் சாதி, மத பேதம் பாராட்டாமல் வழிபட்டு தன் மனக்குறைகளை சுவாமியிடம் முறையிட்டு நீக்கிக் கொள்வார்கள் அங்கு கூடி இருக்கும் பெருங்கூட்டம் விழா போல் தோற்றமளிக்கும்.

சுவாமிகள் அங்கு கூடி இருக்கும் அடியவர்களுக்கு "சிவஞான போதம்" "சுப்பிரமணியர் ஞானம்" "தாயுமானவர் பாடல்" "அருள்பா" இவற்றின் கருத்துக்களை விளக்கி கூறுவார்கள்.

சுவாமிகள் பல அருட் பாடல்களை வேலூரில் பாடியுள்ளார்கள். திரு. கமலப்பிள்ளையிடம் சுவாமிகள் தான் பாடும்போது அவற்றை எழுதிவைத்துக் கொள்ளும்படி சொன்னார்கள். அதன்படியே திரு. கமலப்பிள்ளை சுவாமிகள் பாடிய பாடல் வருடம், மாதம். தேதி, கிழமையுடன் எழுதிய நோட்டு புத்தகமும், சுவாமிகள் நாற்காலியில் அமர்ந்து தாளம் போட்டு கொண்டு பாடிய நாற்காலியும், கைப்பிரம்பும் இப்போது உள்ளது.

சுவாமிகள் திரு. பாலம்மாள் அவர்களிடம் "சுவமி வேலூரில் சமாதியுற வேண்டும்,, என்று நினைக்கிறது ஆனால் பிறந்த இடத்தின் பெயர் மறைந்து விடுமே என்று கருதுகிறது என்பார்களாம்.

சுவாமிகள், பரிபூரணத்தில் கலந்ததும் உடலை சமாதி செய்யும் போது வேலூர் அடியார்கள் அவசியம் உடன் இருக்கவேண்டும் என்று இரெட்டியப்பட்டியில் உள்ளவர்களிடம் கூறினார்கள் அதன்படி வேலூர் அடியார்கள் சென்று சிறப்பாக சமாதி செய்வித்தார்கள்

குருநாதர் ஓர் முறை வேலூர் வந்திருக்கும் சமயம் அடியவர்களும் அன்பர்களும் ஏராளமாக கூடியிருந் தார்கள் அதுசமயம் வெயில் அதிகமாக தகித்து கொண்டிருந்தது சுவாமிகள் அங்கு கூடியிருந்தவர் களை பார்த்து இப்போது மழை பெய்தால் நன்றாக இருக்கும் அல்லவா? என்றார்கள் உடனே சுவாமிகள் எழுந்து வீதியின் பக்கம் சென்று வானத்தை பார்த் தார்கள் மீண்டும் திரும்பவந்து அமர்ந்தார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மேகம் ஒன்று சேர்ந்து சுமார் 2-மணி நேரம் விடாது மழை பெய்தது இந்த அருள் காட்சியை கண்ட மக்கள் எல்லாம் குருநாய கத்தை பாராட்டி வணங்கினார்கள்

திருத்துறைப்பூண்டியில் இருக்கிற அடியவர் ஒரு வர் அவர் வீட்டில் வரும் தேள்களை எல்லாம் பிடித்து ஒருடப்பியில் போட்டு அடைத்து வைத்திருப்பாராம் சுவாமிகள் வேலூருக்குவந்திருப்பதறிந்து தான்டப்பி யில் சேகரித்து வைத்து இருக்கும் தேள்களை யெல்லாம் தன் மடியில் கொட்டி கொண்டு வேலூர் வருவார் சுவாமிகள் நாற்காலியில் அமர்ந்து இருப்பார்கள் அடியவர்கள் அன்பர்கள் ஒவ்வொருவராக பாத பூசை செய்து கொண்டு இருக்கும் போது தன் மடியில் உள்ள தேளை ஒவ்வொன்றாக எடுத்து சுவாமிகளின் திருவடி களில் அர்ச்சிப்பார் தேள்கள் எல்லாம் சுவாமிகளின் திருமேனியில் அங்கங்கே நின்று கொண்டு இருக்கும்.

சுவாமிகள் அந்த அடியவரிடம் இனி இது போன்று செய்யாதீர்கள் இந்த சீவன்களை ஆகாரம் இல்லாமல் வதைப்பது பெரும்தவறு என்று அறிவுரை கூறினார்கள்,

குருநாதரின் அரும் பெரும் அருள் செயல்களை எழுத்தாலும் பேச்சாலும் விளக்க முடியாது.

அய்யனின் அருளை நேரில் கண்டு ஆனந்திக்க வேண்டும் அன்றும் இன்றும் அருள் திருமுடி தரித்து கருணை செங்கோல் தாங்கி வேளூர் என்னும் திருத் தலத்தில் அருளரசு புரிந்து வருகிறார்கள் சாதி, மத வித்தியாசம் இல்லாமல் வேண்டுவார், வேண்டுவதை பெற்று இன்பமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

நோய், பேய் விஷங்களை, நீக்கிடும் இராசாதி, இராசன் எங்கள் இரெட்டியப்பட்டி ஆண்டவர்.

ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை பெரும் விழா நடைபெறும்.

காணவாரீர், அருள் பெறுவீர், நலம் பெறுவீர்,

வாழ்க சற்குருவின் மலரடிகள்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஆண்டவர்
திருவடிகளை போற்றும் இன்பமே இன்பம்.

அரிய கருத்தாழமிக்க தத்துவ ஆராய்ச்சி
சொற்பொழிவு:-

விநாயக பிரபாவம்.
அருள் சட்ட விளக்கம்.
ஔவை காட்டிய அறநெறி.
மனிதனும், கடவுளும்.

நிகழ்த்துபவர்,

குடந்தை S. N. இராமலிங்கம்.

விபரங்களுக்கு,

இரெட்டியபட்டி சுவாமிகளின் அறிவாலயம்
வேளூர், P.O. திருத்துறைப்பூண்டி. Tk.,



போட்டோக்கள். கலர் போட்டோக்கள், விளம்பர போர்டுகள் சினிமாசிலைடுகள், ஷோகார்டுகள் குறிப்பிட்ட காலத்தில் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு,

குரு ஆர்ட்,

குடந்தை S. N. இராமலிங்கம்.

வேளூர் [அஞ்சல்]

திருத்துறைப்பூண்டி கூற்றம்,

ஜெயலெக்ஷிமி விலாஸ் பிரஸ், திருத்துறைப்பூண்டி.